# தமிழ் ஈழ நாடெங்கிலும்

# சுதந்திரக் கொடி உயர்கிறது!


சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 35. வ.ஆ. 2007, தை 21, ஸபர்3, (4-2-76) புதன், புத்தகம் 29, இதழ் 32


## தனிநாடு தீர்மானத்தையொட்டி தமிழ் ஈழமெங்கும் விழாக்கோலம்!

நானூறு ஆண்டுகளுக்கு முன்பு நாடு பிடிக்க வந்த போர்த்துக்கீயரிடம் போரில் பறிகொடுத்ததும்—இன்று பலவந்தமாக சிங்கள ஆட்சிக்குட்படுத்தப்பட்டு அதன் 'காலனி' நாடாக இருப்பதுமான தமிழ் ஈழ நாட்டை விடுவித்து—மீண்டும் பூரண இறைமை கொண்ட சுதந்திர, தன்னுதிக்க சமதர்மக் குடியரசாக அதை மலரச் செய்ய தமிழ் தேசிய இனம் மேற்கொண்டுள்ள விடுதலைப் போராட்டத்தின் ஓரம்சமாக, தமிழ் ஈழக் கோரிக்கையை வலியுறுத்தும் 'தனிநாடு' தீர்மானம் பெப்ரவரி நாலாம் நாளாகிய இன்று தேசிய அரசுப் பேரவையில் முன்வைக்கப்படுகிறது.

இதையொட்டி தமிழ் ஈழமடங்கிலும் விடுதலைக் கொடியான உதயசூரியன் கொடியேற்றும் வைபவங்களும், மற்றும் பல எழுச்சி நிகழ்ச்சிகளும் இன்று நடைபெறுகின்றன. 'ஆண்டபரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை' என்ற உணர்ச்சிக் கவிஞரின் பாடல் வரிகள் தமிழ் ஈழத்தின் மூலை முடுக்குகள், குக்கிராமங்கள், பட்டி தொட்டிகள் எங்கும் இன்று முழங்குகின்றன!

சிங்களத்தையும், தமிழ் ஈழத்தையும் பலவந்தமாகப் பிணைத்துவிட்டு—சிங்கள இனத்தின் தயவில் வாழவேண்டிய சூழ்நிலையில் தமிழ் மக்களை விட்டுவிட்டு, ஆங்கிலேயன் வெளியேறிய பெப்ரவரி 4ம் நாளை இதுகாலவரை தேசிய துக்க தினமாக அனுட்டித்து வந்த தமிழ் பேசும் மக்கள், இந்த ஆண்டு பெப்ரவரி 4ம் நாளை தமிழ் ஈழத் தீர்மான நாளாக—அடிமைத்தளையை அறுத்தெறியும் நாளாக கொண்டாடுகிறார்கள்.

### தமிழீழத் தீர்மானம்!

தமிழ் ஈழத்தை சுதந்திர நாடாக்கக் கோரும் தீர்மானம் இன்று தேசிய அரசப்பேரவையில் தமிழர் கூட்டணித்தலைவர் மூதறிஞர் செல்வா அவர்களினால் முன்வைக்கப்படுகிறது. இத் தீர்மானத்தில் தந்தை செல்வாவுடன் கூட்டணிப் பா. உ.க்களான திருவாளர்கள் சி. கதிரவேற்பிள்ளை, வி. தர்மலிங்கம், வி. என். நவரத்தினம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், வி. ஆனந்தசங்கரி, க. துரைரத்தினம், செ. இராசதுரை, சே. மா. செல்லத்தம்பு, ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.

தமிழர் கூட்டணி பா. உ.க்கள் தேசிய அரசுப்பேரவைக்கு இன்று உதயசூரியன் சால்வைகளையும், சின்னங்

—4-ம் பக்கம் பார்க்க

## முஸ்லிம்கள் ஐவர் பலி?

## தேசிய அரசுப் பேரவையில் இன்று வரும் 'தனி நாடு' தீர்மானம்!

"இலங்கையில் வாழும் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் சுய நிர்ணய உரிமையுள்ள இருதனித்தேசிய இனங்களாக இருப்பதாலும்—

அந்நிய ஆட்சியினால் பலவந்தமாய் ஒன்ருகப் பிணைக்கப்பட்ட சிங்களத் தேசிய இனமும் தமிழ்த் தேசிய இனமும் இன்றும் அப்படியே பிணைக்கப்பட்டிருப்பதாலும்—

சுதந்திர இலங்கையின அரசாங்கங்கள் எல்லாம் சிங்களத் தேசிய இனத்தின் ஆக்கிரமிப்பு இன உணர்ச்சிக்கு ஆதரவளித்து, வளர்த்து தமிழ் மக்களை நிரந்தரமாக ஆளப்படும் இனமாக ஆக்கும் இன்றைய அரசியல் அமைப்பை அவர்கள் விருப்பததிற்குமாருக தமிழ்த் தேசிய இனத்தின் மீது திணித்திருப்பதாலும்—

காங்கேசன்துறை இடைத்தேர்தல் முடிவை—

சுதந்திர, இறைமையுள்ள, மதச்சார்பற்ற சோசலிச. தமிழ்ஈழ அரசை மீள்வித்து புனரமைப்புச் செய்ய இடப்பட்ட கட்டளையாக ஏற்றுக்கொள்ள இப்பேரவை தீர்மானிக்கிறது."

## புத்தளத்தில் ஊரடங்கு அமுல்!

தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழும் புத்தளம் பகுதியில 2-1-76 முதல் ஊரடங்குச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. புத்தளம் நகரத்திலிருந்த பஸ் நிலையம்புகையிரதநிலையத்துக்குஅணித்தாகமாற்றப்பட்டதைதொடர்ந்துபுத்தளசதில் ஏற்பட்டபதட்டநிலை, முஸ்லிம்கள் புத்தளம் ஜும்மா பள்ளிவாசலில் தொழுகையிலீடுபட்டிருந்த சமயத்தில் பொலிசார் அங்கு செய்ததாக கூறப்படும் வெறித்தனத்தை அடுத்து கொந்தளிப்பாக உருவெடுத்துள்ளதாம். இதுதொடர்பாக பொலிசாருக்கும் முஸ்லிம்களுக்கும் நடைபெற்ற மோதலில் ஐவர் உயிரிழந்ததாகவும் அறிய வருகிறது. இதையடுத்து அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

புத்தளம் பஸ் நிலையம் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் மாற்றப்பட்டதன் நோக்கம், முஸ்லிம்களின் வியாபாரத்தைக் கெடுப்பதுதான் என்று கூறப்படுகிறது. புத்தளம் பஸ் நிலயத்திற்கு அருகில் முஸ்லிம்களின் கடைகள் அனேகமாக இருந்தன; புகையிரத நிலயத்தடியில் சிங்களவர்களின் கடைகள் அனேகம் இருந்தன. பஸ் நிலயத்தை புகையிரத நிலயத்துக்கு மாற்றி விட்டால்

4-ம் பக்கம் பார்க்க

## கைது!

கிளிநொச்சி தமிழர் கூட்டணிக் கிளையின் செயலாளர் திரு. ஏகாம்பரம் 1-2-76 ஞாயிறு காலை பொலிசாரால் திடீரெனக் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

## கருணாநிதி கைது?



திராவிடமுன்னேற்றக்கழகத்தலைவரும் கலைக்கப்பட்ட தமிழக அரசின் முதல் வருமான டாக்டர் கலைஞர்

கருணாநிதி அவர்களும், ஏனைய பல தி.மு.க. தலைவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக நமக்குப் பிந்திக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன. ஆயினும் இச்செய்தியை உறுதிப்படுத்த முடியவில்லை.

அதே வேளையில் டெல்லிப் பாராளுமன்ற உறுப்பினரும் தி. மு. கழக பிரமுகருமாகிய திரு. சிட்டி பாபு அவர்கள் கைதாகியிருப்பதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தென்னிந்திய தமிழர்களை நசுக்கி அழித்தொழிப்போம்!

## சிங்களபௌத்தர்களாக மாறினாலே இலங்கையில் தமிழர்களுக்கு எதிர்காலம்!"

### இலண்டனில் சிங்களவர் வெறிப் பிரச்சாரம்!

அழகான மணற்பாங்கான கடற்கரைகளையும், இனேகபூர்வமான மக்களையும், தன்னகத்தே கொண்டு, இந்துமா கடலின் மத்தியிலே இலங்குகிறது எழில் மிகு இலங்கைத் தீவு.

மக்கட்தொகையில் பெரும்பாலானவர்கள் இந்நாட்டின் தேசிய இனத்தினரான ஆரிய சிங்களவர்களே. தென்னிந்தியாவில் இருந்து ஒப்பந்த அடிப்படையில்—தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்கென—தொழிலாளர்களாக பிரித்தானிய ஆட்சியின்போது கொண்டுவரப்பட்ட சிறுபான்மையினரான தமிழர்களும், புராதனகால முகமதியவர்க்கத்தின் எஞ்சிய நினைவுச்சின்னங்களாக ஆங்காங்கு சிதறிக்கிடக்கும் இஸ்லாமியர்களும் இங்குள்ளனர்.

சில முன்னைய வரலாற்றாசிரியர்களைத்தவறான முறையில் குறிப்பிடுவதின் மூலம், இலங்கையில் தனியான ஒரு நாட்டை உருவாக்கும் உரிமை தமக்குண்டெனும், பிழையான தகவல்களைப் பரந்த அளவில் "செய்திக் கடிதங்கள்" வழியாக லண்டன் வாழ் சில தமிழர்கள் விநியோகித்துள்ளனர்.

எங்கள் நாட்டிலுள்ள தமிழர்களின் உரிமைகள் பற்றி ஏற்கெனவே "பண்டாரநாயக்கா — சாஸ்திரி உடன்படிக்கையின் மூலம் தீர்வு காணப்பட்டிருக்கிறது. இதன்படி அந்தமான் தீவுகளுக்கு குடிபெயர்ந்து சென்று, அங்கேயே தம வாழ்வை அமைத்துக்கொள்ளும் உரிமையை இத்த ஒப்பந்தம் அவர்களுக்கு வழங்குகிறது. இவர்களைத்தவிர்த்து, குடியுரிமை பெற்ற ஏனைய தமிழர்கள், இந்நாட்டையே தமது தாயகமாகக் கொண்டு சிங்கள மொழியைக் கற்பதற்கும், பௌத்த மதத்தைத் தழுவுதற்கும், அதன் மூலம் விசுவாசமிக்க சிங்கள மக்களில் ஒருவராகவே தம்மை மாற்றிக்கொள்வதற்கும மகிழ்ச்சியுடன் சம்மதித்துள்ளனர்.

நிலைமை இவ்வாறிருக்க, இங்கு விளைக்கும் தகவல்களும், விஷமங்களும் நிறைந்த, துரோகத்தனமான "செய்திக்கடிதங்களும்" அவற்றில் அடங்கியுள்ள தகவல்களும் வெறும் போலியான முறையில் எழுப்பப்பட்டவைகளே. "எண்ணெய்க்கலத்தில் விழுந்த இறைச்சித்துண்டங்களைப்போல்" சிலுசிலுத்து கிரிக்கெட் ஆட்டங்களைத் தகர்த்தெறியச் செய்யும்படு முட்டாள்த்தனம் வாய்ந்த மடமைச்செயல்களைப்பார்க்கிலும் இவை மிகவும் மோசமானவையாகும்.

இங்கிலாந்து வாழ் தமிழர்களில் பெரும்பாலானோர் தமது சுவீகாரப் பூமிக்குத் திரும்பி, அங்குள்ள சிங்கள மக்களுடன் இரண்டறக் கலந்து வாழும் சமாதான நோக்குடையவர்களாகவே இருக்கின்றனர். சமரசநோக்குள்ள இத்தகைய தமிழர்கள், தமக்கென்று ஒரு போதும் இருந்திராத நாட்டைப்பற்றியோ, அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சிதறிக்கிடக்கும் தமது கலாச்சாரம் பற்றியோ அக்கறை காட்டுவதில்லை. மிகப் பெருமை வாய்ந்த ஆரிய சிங்களக் கலாச்சார, மொழி, நாகரீகத்துக்குள்ளேயே தம்மை ஒருங்கிணைத்துக்கொள்ள இவர்கள் விரும்புகின்றனர். இயக்கங்கள், முன்னணிகள், சங்கங்கள், சபைகள் என அழைக்கப்படும் ஸ்தாபனங்களுக்குக் கிடைக்கும் போதிய ஆதரவின்மையில் இருந்தே இதனை அறியலாம். அவர்கள் (தமிழர்கள்) தாமாகவே இதனை ஒப்புக்கொள்ளுகின்றனர்.

### பௌத்த சிங்கள இலங்கையில் நம்பிக்கையற்ற தமிழர்களுக்குச் சில அறிவுரைகள்:-

வெறும் சொற்பிரயோகங்களோ, சுலோகங்களோ, கொடிகள் காட்டுதலோ, வீணான வரட்டுக் கூச்சல்களோ எதுவாயினும், தனிப்பட்ட முறையில் எந்தவித உதவிகளையும், உங்களுக்குத் தரப்போவதில்லை. நீங்கள் யார், யாரையெல்லாம் நண்பர்கள் என்று அழைக்கிறீர்களோ, அவர்கள் ஒருபோதும் உங்களுடன் நிற்க மாட்டார்கள் என்பது உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். உங்களுடன் சேர்ந்து பணத்தைப்பகிரவோ, நேரத்தைச் செலவிடவோ, அல்லது ஆபத்து நேருங்கால் அதன் அபாயத்தில் உங்களுடன் சேர்ந்து பொறுப்பேற்கவோ அவர்களால் ஒருபோதுமே முடியாது. ஆகையால் உங்களுடைய ஓய்வு நேரங்களை மிகப் பெருமை வாய்ந்த சிங்கள மொழியையும், பௌத்த மதத்தினைப் பற்றியும் படிப்பதற்குச் செலவிடுங்கள். இது இறுதி வரையும் உங்களைக் காப்பாற்றுவதோடு, ஒருபோதும் உங்களைக்கைவிடவும் மாட்டாது.

### சிங்களம் பேசும் கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் சில அறிவுரைகள்

இப்பொழுது நீங்கள் எந்த மதத்தைத் தழுவியிருக்கிறீர்களோ, அது அன்னியர்களால் இந்நாடு ஆக்கிரமிக்கப்பட்டபோது உங்கள் முன்னோர்கள் மீது திணிக்கப்பட்ட ஒன்றாகும். இப்போது நாங்கள் சுதந்திரப் பிரசைகள். உங்களைப் பற்றி நன்கு சிந்திப்பதோடு மட்டும் நின்றுவிடாது, ஆரிய சிங்கள—பௌத்த இராச்சியத்துக்காக உங்களைத் தயார்ப்படுத்துவதின் மூலம் உங்கள் முன்னோர்களுடைய ஆத்துமாக்களின் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யத் தவறாதீர்கள். அழுக்கானவர்களுக்கும், புனித மற்றவர்களுக்கும் எம்மிடம் இடமில்லை.

### சிங்கள இடதுசாரிகட்கும் மாவோ லெனின் ட்றொக்சிய (Trotskyites) வாதிகளுக்கும் சில அறிவுரைகள்

எங்களுடைய குறிக்கோள்களுக்கு, தமிழர்களைப்பார்க்கிலும் மிக மோசமான பச்சைத் துரோகிகள் நீங்களே. உங்களுடைய மேற்கத்திய அரைவேக்காட்டுச் சிந்தனைகளுக்கு எமது பௌத்த சமுதாயத்தில் எவ்வித மதிப்பும் கிடையாது. எமது அரசாங்கத்தில் இருந்து உங்களுடைய சகபாடிகள் ஏற்கனவே தூக்கியெறியப்பட்டு விட்டனர். சிங்கள பௌத்த இலங்கையில் நாம் கொண்டுள்ள நம்பிக்கையை ஏற்கும் விதத்தில், உங்களைப் பயிற்றுவிக்கத் தக்கதாகச் சிந்தனையை மறுபரிசிலனை செய்யத்தவறும் பட்சத்தில் உங்கள் தலைவிதி சேகுவேராக்களைப் பார்க்கிலும் படுமோசமான தொன்றாகவே இருக்கும். ஜொரியர்களுக்கு என்ன நடந்ததென்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். எனவே, வெளிநாட்டு உதவி கொண்டு உங்கள் பாதுகாப்பைத் தேட முயலாதீர்கள்.

### தென்னிந்திய தமிழர்களுக்கு ஒரு செய்தி:-

உங்களுடைய பேராசைக் கண்களை எமது நாட்டை நோக்கித்திருப்பாதீர்கள். எங்களுடைய நாட்டுக்குப் பெரும் சுமையாகவிருக்கும் தமிழர்களை நீங்கள் எப்போது விரும்புகிறீர்களோ, அப்பொழுதே திரும்பவும் உங்கள் நாடடுக்கு அழைத்துக் கொள்ளலாம். மிக நீண்ட காலமாக, அவர்களைக் கவனித்து, உணவளித்துக் காப்பாற்றியமைக்காக நீங்கள் கட்டாயம் எமக்கு நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும்.

உங்களைச் சேர்ந்த சில பகுதி நேர அரசியல் வாதிகள், படையெடுப்பைப் பற்றியும், நாட்டைத் துண்டாடுதல் பற்றியும் பெரிதாக ஒலமிடுகிறார்கள். இவைகள் உங்களை ஏமாற்றுவதற்காகச் சொல்லப்படும் வெறும் வார்த்தை ஜாலங்களேயன்றி வேறொன்றுமில்லை. எங்களுக்கு எமது நாட்டின் வடக்கிலும், உங்கள் பிரதம மந்திரி மத்தியிலும் மிகச் சிறந்த நண்பர்கள் உண்டு. இவர்களின் துணைகொண்டு இரண்டு பக்கங்களிலும் இருந்து உங்களை நசுக்கி, அழித்தொழிப்போம். தொடர்ந்தும் உங்களுடைய கீழ்த்தரமான நூல்களை இங்கு அனுப்பாதீர்கள். எமது எழில்மிக்க தீவில் இருந்து உங்களுக்கு ஏன் ஒரு நாடு வேண்டும் எனும் விடயத்தையிட்டு நாம ஆராய தயாரில்லை.

### இலங்கையின் சகல சிங்கள மக்களுக்கும்:-

காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்காவின் அரசியல் மேதா விலாசத்துக்கும், தற்போதைய பிரதமர் திருமதி பணடாரநாயக்கா, அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஒளிமிகுந்த எதிர்காலத்தை நோக்கி வீறுநடைபோடும், மதிநுட்பம் வாய்ந்த திரு. அனுரா பண்டாரநாயக்கா ஆகியோர்களுக்கும் நாம் கட்டாயம் நன்றிக்கடப்பாடுடையவர்களாகவிருத்தல் வேண்டும். சிங்கள—பௌத்த இலங்கையொன்றைக்கட்டியெழுப்பும் பணியில் இவர்களின் கருணைமிக்க ஆட்சி தொடர்ந்து நீண்ட காலம் நடந்துவர இறைவனைப் பிரார்த்திப்போமாக.

[லண்டனில் உள்ள "இலங்கையைப் பற்றி உண்மை விளம்பும் இயக்கத்தால்" விநியோகிக்கப்பட்டது.]

(Issued by: THE TRUTH ABOUT SRI LANKA CAMPAIGN—London sw 4.)

—தமிழாக்கம்:
எஸ். 'பெனடிக்ற்

---

இலண்டனில் தமிழ் ஈழக் கோரிக்கைக்கு ஆதரவாக ஈழ விடுதலை முன்னணியும் ஏனைய ஈழத்தமிழர் அமைப்புக்களும் நடத்தி வரும் பிரச்சாரங்களும் எடுத்துவரும் நடவடிக்கைகளும் உலக அரங்கில் சிறீலங்கா சிங்கள ஏகாதிபத்தியத்தின் முகமூடியைக் கிழித்துவருகிறது. இதை ஜீரணித்துக் கொள்ளமுடியாத சிறீலங்கா சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகள் சிலர்; ஈழத் தமிழ் மக்களையும், தென்னகத் தமிழர்களையும், இஸ்லாமியத் தமிழர்களையும் படுகேவலமாகவும், கீழ்த்தரமாகவும், அச்சுறுத்தியும் — இலண்டனில் துண்டுப்பிரசுரமொன்றை அடித்து விநியோகித்து வருகின்றனர். True Image 'உண்மையின் தோற்றம்' என்பது அதன் பெயர். உண்மை என்ற பெயரில் படுபொய்யானதும் இனவெறியை தூண்டுவதுமான கருத்துக்களை அது கொண்டிருக்கிறது. இந்தப் பிரசுரத்தைப் படிக்கும் போது இலண்டனிலுள்ள படித்த சிங்களவர்களுக்கு இவ்வளவு தூரம் இனவெறியிருக்குமானால், இங்கு வாழும் சிங்களவர்களுக்கு எவ்வளவு தூரம் வெறி இருக்கும் என்ற கேள்வியும் நமக்குள் எழுகிறது.

படிக்கும் போதே தமிழனின் ரோச நரம்பைத் தட்டியெழுப்பக்கூடிய சிங்களவர்களின் அந்த ஈனத்தனமான ஆங்கிலப் பிரசுரத்லதை அப்படியே தமிழாக்கி இங்கு தந்துள்ளோம். —ஆர்.

---

வால்டர் சுவோஸ் அறிக்கை
அடுத்த புதன் இதழில்
11 - 2 - 76
இடம்பெறும்

---

● சின்னஞ்சிறிய சுதந்திர நாடுகள் - 5.

## லக்சம் போர்க் (Luxembourg)

லக்சம் போக் முடியரசு பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய தேசங்கட்கிடையில் அமைந்துள்ளது. இதன் விஸ்தீரணம் 998 சதுர மைல். இது யாழ்ப்பாண விஸ்தீரணத்துக்கு சரியாகும். சனத்தொகை 400,000. யாழ்ப்பாணச் சனத்தொகை 700,000.

மூன்றிலொரு பகுதி மக்கள் கோதுமை, உருளைக் கிழங்கு முதலியன பயிரிடும் விவசாயிகளாவர். கால்நடைப் பண்ணைகளும் உண்டு. உலோகச் சுரங்கங்களும் கைத் தொழில்களும் நல்ல வருமானத்தைக் கொடுக்கின்றன.

சுயபாஷையாகிய லக்சம் போசோவையும், பிரெஞ்சு பாஷையையும் அரசகரும மொழிகளாகக் கொண்டுள்ள நாடு.

50 பேர் வரை மக்களால் தெரியப்பட்ட அங்கத்தவர்களைக்கொண்ட சபையும் ஆளும் தலைவி (மாபெருஞ் சீமாட்டி எனப்படுபவர்) யால் நியமனம் பெற்ற 15 பேரைக்கொண்ட அரசாங்க சபையும் நாட்டு நிர்வாகத்தை ஏற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் அளவான இந்த நாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழ் ஈழம் ஏன் சுதந்திரமான தன் நாடாயிருக்கமுடியாது? எம்மிடம் கல்விமான்கள் சிந்தனையாளர் இல்லையா? நாட்டுப்பற்றுள்ளோர் நிர்வாகிகள் கிடையாதா? கைத்தொழில் வல்லுனர், விவசாயிகள் போதியளவு இல்லையா? வாணிபத்துக்கேற்ற துறைமுகங்களுக்குக் குறைச்சலா? —நாம்.

---

## சிங்கள மார்க்ஸிய வாதிகள் பார்வைக்கு . . !

'ஒரு தேசிய இனம் பிரிவினை கேட்கிறபோது அந்த இனத்தை ஆள்கிற இனத்தைச் சேர்ந்த தொழிலாள வர்க்கம் பிரிவினைக்கு ஆதரவாக இருக்கவேண்டும்!

—கார்ல் மார்க்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழக் கனவு நனவாகிறது!

பாரதம் விடுதலைப் போரின் ஈடுபட்டிருந்த காலம், அப்போது

நீதுசிறி துயம்பயிலாச்
செம்மணிமா நெறிகண்டோம்
வேதனைகள் இனிவேண்டா
விடுதலையோ திண்ணமே''

''எண்ணங்கெடுதல்வேண்டா!
திண்ணம் விடுதலை திண்ணம்''

என்றும் பாரத விடுதலை உறுதியானது என்று மக்களின் உள்ளத்தில், நம்பிக்கைச் சுடரை ஏற்றினன் மகாகவி பாரதி. உண்மைக் கவிஞர்களுக்கும் உணர்ச்சிக் கவிஞர்களுக்கும் தீர்க்க தரிசனம் பிறப்புரிமை. எதிர்கால நிகழ்ச்சிகளை முன் கூட்டியே உணர்த்துரைப்பது அவர் தம் இயல்பு. பாரதி இதற்கு விதிவிலக்காக வில்லை.

பாரதம் விடுதலை பெற ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே பாரத விடுதலையை ஞானரதம் மூலம் கண்டு அதனை வரவேற்றுப் பள்ளுப் பாடினன் பாரதி.

''ஆடுவோமே பள்ளுப்
பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து
விட்டோமென்று
ஆடுவோமே பள்ளுப்
பாடுவோமே''

என்ற பாடல் பாரதியாரின் தீர்க்க தரிசனத்துக்கு உதாரணம். இப்பள்ளு பாரத விடுதலைக்குத் தமிழர்கள் தங்களை முழுமையாக அர்ப்பணிக்க நம்பிக்கை யூட்டியதெனலாம்.

பாரதி வழியிலே தமிழ் ஈழவிடுதலையைத் தீர்க்க தரிசனம்மூலம் உணர்ந்துபாடிய கவிஞர்கள் பலரை ஈழத்திலே நாம் காண்கிறோம். 1949ம் ஆண்டுக்கும் 1973ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலம். ''ஐக்கிய இலங்கைச் சமஷ்டியின் ஓர் அங்கமாக ஒரு தமிழரசு நிறுவப்பட்டுத் தமிழ்பேசும் மக்கள் தம் சுதந்திரத்தைப்பெற வேண்டும்'' என்றோ அல்லது சிங்களவரும் தமிழரும் ஒற்றையாட்சியின் கீழ் ஒன்ருக வாழவேண்டும் என்றோ பெரும்பான்மையான தமிழர்கள் நம்பிச்செயலாற்றி வந்த காலமாகும்.

இக்காலத்திலே பல கவிஞர்கள் தமது சமகாலச் சிந்தனையையும் விஞ்சி தமிழீழ விடுதலைக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

''ஆண்ட வெள்ளையர் கள்நேர்
அறவழித் தவறினர்
அசட்ருக்கழகியை அடகுவைத்
தனர்கள் இப்
பூண்டுகள் தமிழை யோர
புறம் ஒதுக்கிடுகிருர்''

என்றும்,

'மூண்டெழுந் திடுகபோர்
முதுமொழிக் குரிமைகள்
முழுமையும் பெறுக.
இறைநேன் முடிந்ததொழிக
இந் நீண்ட நெல வயல்
நிலம் நினது காண்
தமிழனே''

என்றும்,

......கொடு பதில் கொடிய
கோல் கடகடத் தரசினர்
கவிழவைத் திடு விதிகளை
உடைத் திடுகவே
வரிமதுத்திடுக...
பறையெலாம் அதிர்க நம்
பலமெலாம் திரள்கவே...''

என்றும் பாடிய கவிஞர் இறுதியிலே தமிழீழக்கோரிக்கையை மறைமுகமாக எழுப்புகிருர்.

''பாதி நாடெங்களுக்காக
என றெழுகவே''

என்று ஆணை பிறப்பிக்கின்கின்ருர். இலங்கை என்ற பெயரால் இணைந்துள்ள நாட்டின் பாதியான தமிழ

**மணி அரசன்**

ஈழம் எமது முதுசொத்து. அது எமது அடுத்த பரம்பரைக்கும் உரிமையாக வேண்டும். எனவே போர் மூண்டெழுக என்கிருர் கவிஞர். போரிலே,

''சாவரின் மகிழ்க நம்
சந்ததிக் கெமது முன்
தந்தையர் தந்தவை
தருவதெம் கடனடா''

என்று கூறி இது அறநெறியின் பாற்பட்டது என்கிருர். வெற்றி உறுதி என்றும் அறுதியிட்டுரைக்கிருர்.

'அறமெலாம் ஒருகரைப்படின்
அவர் வெல்லுதல்
அணுப்பிளந் தெறியினும்
ஆவதொன்றல்லவே''

இவ்வாறு 1961ஆம் ஆண்டிலேயே தமிழீழப் போரையும் அதன் வெற்றியையும் கூறியவர் கவிஞர் மகாகவி ஆவர்.

தமிழர்களிற் பெரும்பாலோர் இலங்கை ஒரே நாடு என்ற மாயைக்குட் பட்டுத் தேசியம் பேசி அடிமைத்தனத்துக்குச் சாமரை வீசி வந்தனர். இதுவே தமிழீழ விடுதலைக்கு ஊறுவிளைத்தது. 'அம்பலத்தாடி' என்ற கவிஞர் வெள்ளையர் ஏற்படுத்திய ஒருமைப் பாட்டின் பிழையைப்பாடுகிருர்.(1962)

'தமிழ்நாடிது தனிநாடேனும்
சரியா முணர்வடைந்தால்
அமிழ்தாகிய விடுதலை நிலை
அடைவோ மிது நிசமாம்-வரு
தடையோ தூகள் நிசமாம்'

என்று தனி நாட்டுப் போரின் வெற்றியைப் பாடுகிருர்.

இலங்கையில் ஈழம், சிங்களம் என இருவேறு நாடுகள் உள. இது பழைய வரலாறு. இது மீளவேண்டும் என்கிருர் வித்துவான்வேந்தனர் (1961)

தந்தைவழித் தந்தையராய்
ஈழநாட்டில்
தமிழரினம் வாழ்ந்த நிலை
தவிர்க்கப் போமோ
செந்தழலில் எமை வீசி
எரித்திட்டாலும்
சிங்களத்துக் கடிபணியோம்
திரண்டு வாரீர்.

''இமிலைத் துமிலன்'' ஈழக் இலங்கை பெற்ற செந்தமிழ்க் கவிஞன் ''கொடியேறு- தமிழாட்சி நாட்டு'' என்று வீராவேசமாக அவர் குரலெழுப்புகிருர். (1961)

'பிடி நித்துப் போகட்டும்
[illegible]
பிணைந்தினனும் வெறிபாடக
அடியோடே [illegible]
கொடியேற்று தமிழாட்சி
நாட்டு இங்கக்
கொலைநாய்கள் விழ ஈரற்
குலைமாலை சூட்டு''

சிங்கள வெறியாட்சி குற்றுயிராக விடப்படக் கூடாது அடியோடு சாக வேண்டும் என்கிருர் கவிஞர்.

புத்தனின் வழியிலே செல்வதாகப் பஞ்சசீலம் பேசும் அரசு கொடுமை செய்கிறது. இது எத்தனை நாள் நீடிக்கும்?

''புத்தனை மறந்து பூச்சாண்டி
காட்டுது
பூமி முழுதும் அறியுது
அறியுது
வித்தைகள் தோற்குது வீரம்
விளையுது
விடுதலை வருகுது விலங்கு
ஒடியுது''

என்கிருர் கவிஞன் வையூரன்.

ஆண்ட தமிழினம் மீண்டு
மொரு முறை
ஆள நினைப்பதில் என்ன
குறை''

என்று பாடிய பாரதியின் வாரிசு, உணர்ச்சிக் கவிஞன், தமிழீழ விடுதலைக்காகச் சிங்கள சிறையில் நெடுங்காலம் தவம் செய்யும் தமிழீழத் தலைமைக் கவிஞன் காசி ஆனந்தன்.

''பூத்தடா தமிழீழம்'' என்று வெற்றி முரசமும் எழுப்பி விட்டார்.

இத்தனை கவிஞர்களும் ஈழவிடுதலைப் பரணி பாடிய போதிலும் ஈழம் விடுதலை அடையவில்லை. ஏன்?

''மூற்ருகப்பிரித்தஇரண்டு இராஜ்யங்கள் நம் நாட்டில் ஏற்பட்டால் வகுப்புப் பூசல்கள் மக்களிடையே ஏற்பட்டு துவேஷம் வளர்வதற்கு அதுவே ஏதுவாகி விடும்'' என்ற எண்ணம் தமிழரின் ஒரே அரசியல் நிறுவனமாயிருந்த தமிழரசுக் கட்சியிடம் இருந்ததே எமது விடுதலை தடைப் பட்டதற்குக் காரணமாகும்.

இந்நிலை இன்று மாறிவிட்டது. தமிழரசுக் கட்சிவேறுபாடுகளை மறந்து தமிழர் கூட்டணியில் ஒன்ருகித் தமிழீழத்துக்குப் போராடத் தீர்மானித்து விட்டனர். தமிழரசுக் கட்சியும் வரலாற்றை நன்கு கற்றுணர்ந்து மல்லாகம் மகாநாட்டில் தமிழ் நாடு பெறுவதற்குப் போராடத் தீர்மானித்தது.

கால் நூற்ருண்டு காலம் ஒருமைப்பாடு கருதி வேற்றுமையில் ஒற்றுமை காணும் கூட்டாட்சியை அவாவி நின்ற தமிழரசுக் கட்சி தமிழீழம் காணத்தீர்மானித்த செயல் ஈழத்தின் வரலாற்றில் ஒருபுதுயுகத்தின் நுழைவாயில் என்பதில் ஐயமில்லை.''

''இந்நாட்டுப் பெரும்பான்மைத்தேசிய இனத்தின் ஒத்துழைப்போடோ, சம்மதத்தோடோ தமிழ்த்தேசிய இனத்தின் உரிமைகளை நிலைநாட்டுவது சாத்தியமில்லை என்று கருதி, தமிழ்தேசிய இனம் தனது பாரம்பரியமான தாயகத்தில் தமது சுயாட்சி உரிமைகளை நிலைநாட்டுவதே ஒரே வழியென்று தமிழர் கூட்டணி தீர்மானித்து அதன் அங்கமான பல்வேறு கட்சிகளின் பரிசீலனைக்கு அக்கருத்தைச் சமர்ப்பித்திருப்பதால், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 12ஆம் மாநில மாநாடு (1973-9-12) மொழியால், கலாசாரத்தால், வரலாற்ருல், பிரதேசத்தால் ஒரு தனி இனமாக வாழவேண்டும் என்ற உணர்ச்சி, ஓர் தனித்தேசிய இனமாகக் கணிக்கப் படுவதற்குப் பூரண தகுதிபெற்ற இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் சர்வதேச நீதிக்கிணங்க ஏற்றுக்கொள்ளப் பட்டதேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படைத் தத்துவத்தின் படி தமது பாரம்பரியமான தாயகத்தில் இலங்கைத் தமிழ் தேசிய தன்னாட்சி காண்பதே எமக்குள்ள ஒரே வழி எனத் தீர்மானிக்கிறது.''

இத்தீர்மானம் காங்கேசன் துறைத்தேர்தலில் அமோக ஆதரவைப்பெற்றுவிட்டது. மக்கள் வழங்கிய உரிமையைக்கொண்டு தமிழர் முதல்வர், தந்தை செல்வநாயகம் வெள்ளையன் இந்நாட்டை விட்டகன்றதற்குச் சிராத்தம் செய்யும் புண்ணிய திகதியிலே (பெப்ருவரி-4) சிங்களப் பெரும்பான்மைப் பாராளுமன்றத்தில்தமிழீழக்கோரிக்கையை முன் மொழிய இருக்கிருர். இதன் மூலம் நெடுங்காலம் கவிஞர்கள் கண்ட இலட்சியக் கனவு நனவாகிறது.

''இன்றிவ் வறப்போ ரிதுநீகை
விட்டாயேற்
குன்று முனது குல தருமம்
என்றறைந்து
செல்வா அழைக்கின்ருர்
சோதரரே சென்றிடுவீர்
வெல்க தமிழ் ஈழம்
விரைந்து''

என்று 1962இல் கவிஞர் அம்பலத்தாடி, தமிழீழப் போருக்குச்செல்வர் அழைப்பதாகப் பாடினர். அது இன்று நனவாகிறது தமிழர் செல்வர் அணியில் சேர்ந்தால் வெல்வர், சாதி, சமயம், கட்சி, பால் வேறுபாடின்றிச் செல்வர் அணியில் தமிழர் அனைவரும் திரளவேண்டும்.

''இரவு விழுந்தது கேளீர்—
தமிழ்
ஈழவள ஞாயிறு எழுந்தது
பாரீர்''

என்று தமிழர் கண்கொள்ளும் நாள் விரைவில் வருவதாக.

## கொடிதனை ஏற்றுங்கடி!

தமிழினம் ஒன்று சேர்ந்ததடி — அது
தன்மான உணர்வில் தேர்ந்ததடி!
அமிழ்தினு மினிய அருந்தமிழே — இனி
அவனியை ஆளப் போகுதடி — இதை
அறிந்தவர் பகைமனம் வேகுதடி!

தமிழ்க்கொடி உயரப் பறக்குதடி — எங்கள்
தனித்துவந் தன்னை விளக்குதடி!
தமிழ்ந்தெழும் எங்கள் மறவர்படை — இளம்
குருத்தென நாளும் வளருதடி — இது
குறித்தே சில உளம் குழறுதடி!

அடிமை வாழ்க்கை அறுந்ததடி — எம்முள்
அகிம்சை மார்க்கம் பிறந்ததடி;
மீடிமை அகற்றித் தினம்வாழ — செம்மை
மிளிரும் கொடிதனை ஏற்றுங்கடி! — அதில்
ஒளிரும் ஞாயிறைப் போற்றுங்கடி!

—செ. சிவானந்ததேவன்

## மொழியெனும் வாளொடு மூட்டுக போரை!

ஆடும் மயிலே! ஆடல் நிறுத்து!
அடிமை எனக்குன் ஆட்டமா தேவை?
பாடும் குயிலே பாடா தொழிவாய்!
பாவியேன் செவிக்குன் பாடல்கள் அவலம்!
பேசும் கிளியே பிழைமொழி ஒழியின்!
அபற்ற நாட்டரசிலான் பேச்சிலா மகிழ்வான்?
உன் னிசைவாண இசைப்பொருள் மூறிமின்!
என்னிரு செவியில் எனக்கிலை உரிமை!
கைகளில் விலங்கு! கால்களில் விலங்கு!
கண்களில் கருத்தில் எங்கணும் விலங்கு!
நெஞ்சினை முறித்தா வாய்கம்கார் உணவு?
நெற்றியைப் பிளந்தா சிகைக்குமை நீவல்?
கலைஏன்? கவிஏன்? கானக் கருவியேன்?
கண்படு தமிழ்ப் புவி காப்பதில்லாமல்?
தன்னர சடையாத் தறுதலை எனக்கே
இன்ன ருங்கலைகள் ஏன்ஏன்? ஏன்ஏன்?
பிச்சைப் பாத்திரம் பெருகிய தெங்கணும்
பேடிமை தமிழரின் உடமை ஆயது!
சட்ட மன்றிலும் சட்டி ஏந்துவன்
தமிழ னல்லால் இப்புவிதனில் யாருளர்?
நாடும் பிறர்பால்! நலமும் பிறர்பால்!
ஏடும் பிறர்பால்! இரப்போன் என்னவன்!
எம்மை ஈன்றவள் அம்மியைக் குழவியை
ஈன்றிருந்தாலும் அரைப்பதற் குதவும்;
நாயினும் தமிழன் இழிந்தவன்—''அந்த
நாய் மறுநாய்க்குப் பணிவ தின்மையால்''
ஏ ஓய்த்மிழ! ஏ ஓய்தமிழ!
மொழியெனும் வாளொடு மூட்டுக போரை!
அழிவதில் இப்பணிக் கழிவதே பெருமை
வீட்ணக் குலத்தை வேரொடு சாய்ப்பாய்!
வேற்றவர் மார்பில் காலூன்றி நடப்பாய்!
குருதியில் குளிப்பாய் கொற்றவர் ஆண்ட
திருவினை நாட்டை மீட்பதில் அழிவாய்!
தனிமையில் செல்லப் பணிப்பினும் முதலில்
சா றேன் நான்பின் தைரியம் பெறுக நீ!

—கவியரசு கண்ணதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி. மு. க. அரசு கலைப்பு!

# தமிழகத்தில் கொந்தளிப்பு!

நாலரைக்கோடி தமிழக மக்களின் நம்பிக்கைக்குரியதாகவும், உலகெலாம் பரவி வாழும் தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் விளங்கிய தமிழக திராவிட முன்னேற்றக்கழக அரசை இந்திய நடுவண் அரசு எதேச்சாதிகாரமாகக் கலைத்த செயல்—அரசியல் ரீதியான ஓரவஞ்சனை நடவடிக்கையென்று ஈழத் தமிழ் அரசியல் தலைவர்கள் வர்ணித்தனர்.

தி. மு. கழக அரசு திடீரெனக் கலைக்கப்பட்டதையடுத்து தமிழ் நாட்டில் பதட்டமும், கொந்தளிப்பும் நிறைந்த பரபரப்பான ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அரசு கலைக்கப்பட்டதையடுத்து, கழகம் தடை செய்யப்படுமானால், தமிழகத்தில் இரத்த ஆறு ஓடுவது தவிர்க்க முடியாததாகி விடும் என்று கருதப்படுகிறது.

1967ம் ஆண்டும், 1971ம் ஆண்டும், அடுத்தடுத்து வந்த இரண்டு பொதுத் தேர்தல்களிலும் தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்று ஆட்சியைப்பிடித்த திராவிட முன்னேற்றக் கழகம், கடந்த ஒன்பதாண்டு காலமாக தொடர்ந்து ஆட்சிக் கட்டிலில் இருந்து வந்தது தெரிந்ததே.


தமிழகத்தில் கலைஞர் தலைமையில், தி. மு. க. ஆட்சியின் கீழ் தமிழ் மக்கள் பெற்றுவந்த இன, மொழியுணர்ச்சியைக் கண்டு பீதியடைந்த மத்திய அரசு, தமிழ் மக்களின் நியாயமான இன உணர்ச்சியை நசுக்கும் ஒரு நடவடிக்கையாகத்தான் தி. மு. க. அரசைக் கலைத்திருக்க வேண்டுமென அரசியல் அவதானிகள் வியாக்கியானம் செய்கின்றனர்.

30-1-76 வெள்ளிக்கிழமை நள்ளிரவு தி. மு. க. அரசு கலைக்கப்படுவதற்கு ஒரு திங்களுக்கு முன்பே, இதற்கான சதித்திட்டம் டெல்லியில் தீட்டப்பட்டு விட்டது. இதை 14-1-76 சுதந்திரன் ஏற்கெனவே அம்பலப்படுத்தியிருந்தது. இச்சதித்டம் தீட்டப்பட்டதைத் தொடர்ந்துதான், தி. மு. க. அரசு மீது இந்திய பிரதமர் இந்திராகாந்தியும், இந்திரா காங்கிரஸ் தலைவர்களும் குற்றப்பட்டியலைச் சுமத்தத்தொடங்கினர் என்பது சுட்டிக் காட்டத்தக்கது.

தமிழகத்தின் தலைநகரான சென்னையில் இப்போது பொதுக் கூட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. பத்திரிகைகள் கடுமையான தணிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றன. இராணுவம் வரவழைக்கப்பட்டிருக்கிறது.

அதே சமயம் பேரறிஞர் அண்ணாவின் அமரத்துவ தினமான பெப்ரவரி 3ம் நாள் செவ்வாய்க்கிழமை அண்ணா சமாதி நோக்கி தி. மு. கழகம் மௌன ஊர்வலம் ஒன்றை நடத்துகிறது.

## சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்




## தமிழ் ஈழ நாடெங்...

—1-ம் பக்கத் தொடர்

களையும் அணிந்து சென்று தமிழ் ஈழப்பிரேரணையை முன்வைக்கவிருக்கின்றனர்.

### கொடியேற்றம்!

இதே நேரத்தில் தமிழ் ஈழத்திலும் (வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும்) ஏனைய தமிழ் பேசும் மக்கள் வாழும் இடங்களிலும் உதயசூரியன் கொடிகள் ஏற்றிவைக்கப்படுகின்றன. வீடுகள், கடைகள், பொது நிலையங்கள், படிப்பகங்கள் அனைத்திலும் இன்று கொடிகள் பறக்கின்றன. அதே நேரத்தில வைபவரீதியாக தமிழ் ஈழத் தேசிய கீதத்துடன் ஒவ்வொரு தொகுதியிலும் இரண்டு மூன்று இடங்களில் தமிழர் கூட்டணித் தலைவர்களும், தமிழ இளைஞர் பேரவையினரும் கொடி ஏற்றிவைக்க ஏற்பாடுகள் செய்துள்ளனர். தமிழ்ஈழத் தீர்மான நாளையொட்டி தமிழ் ஈழமடங்கிலும் எழுச்சியும், மகிழ்ச்சியும் விடுதலை ஆவேசமும் கரைபுரண்டு ஓடுகிறது.

### மாணவ மாணவியர் எழுச்சி

தமிழ் மாணவ மாணவியர்கள், இன்றைய தினம் உதயசூரியன் சின்னங்கள் அணிந்து தமிழுடைகளுடன் பாடசாலைகளுக்கு செல்வதுடன், பாடசாலைக்கு செல்லும் போதும் பாடசாலைகளிலிருந்து திரும்பும்போதும் தமிழ் ஈழத் தேசிய கீதத்தை இசைப்பார்கள். இலட்சக்கணக்கான உதயசூரியன் சின்னங்கள் மாணவர்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளது.


### வீடுகளில் பொங்கல்!

வீடுகள் தோறும் தமிழ் பெண்கள் பொங்கியெழும் தங்கள் விடுதலை உணர்வின் அடையாளமாக உதயசூரியனுக்கு பொங்குகிறார்கள். ஆலயங்கள் அனைத்திலும் இன்று பகல் 12 மணிக்கு ஒரே சமயத்தில் மணிகள் ஒலித்து உருவாகும் தமிழ் ஈழத்துக்கு ஆசிகூறுகின்றன. விசேட பூசைகளும், பிரார்த்தனைகளும் இன்று நடைபெறுகின்றன.

இன்று பகல் 12 மணிக்கு ஒரே சயமத்தில் வெடிகள் கொழுத்தி தங்கள் மகிழ்ச்சியைக் காட்டவும் தமிழ் மக்கள் தீர்மானித்துள்ளனர்.

### நீர்கொழும்பு இளைஞர் பேரவை

தமிழ் இளைஞர் பேரவையின் நீர்கொழும்புக் கிளையினர் தமிழீழக் கோரிக்கையை வலியுறுத்தும் துண்டுப் பிரசுரமொன்றை ஆங்கிலத்திலும், தமிழிலும் பல்லாயிரக்கணக்கில் அச்சிட்டு விநியோகித்துள்ளனர்.



### திருகோணமலையில் பொலிசார் பறிமுதல்

பெப்ரவரி 4 தீர்மானத்தையொட்டி திருகோணமலை தமிழ் இளைஞர் பேரவையினர் வெளியிடவிருந்த துண்டுப் பிரசுரமொன்றை அச்சகத்தில் வைத்துப் பொலிசார் கைப்பற்றிச் சென்றுள்ளனர்.

### வெளிநாடுகளிலும்!

இன்றைய தினம் இலண்டன், இந்தியா போன்ற வெளிநாடுகளிலும் தமிழ் ஈழ விடுதலைக் கொடியான உதயசூரியன் கொடிகள் உயர்த்தப்படுகின்றன. தமிழ் ஈழத்தைப் பிரித்துக் கொடுக்கும்படி சிங்களப் பிரதமரைக் கோரும் தந்திகளும் வெளிநாடுகளிலிருந்து இலங்கை நோக்கி அனுப்பப்படுகின்றன.

### 2000 பொலிசார் குவிப்பு!

பெப்ரவரி 4ம் நாளையொட்டி — தமிழ் மக்களின் போராட்டத்தை நசுக்குவதற்காக 2000 விசேட பொலிசாரை சிங்கள அரசாங்கம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

### கொடியேற்றப்படும் இடங்கள்!

இன்று உதயசூரியன் சுதந்திரக்கொடி வைபவரீதியாக தமிழ் ஈழத்தேசிய கீதத்துடன் ஏற்றிவைக்கப்படும் சில இடங்கள் வருமாறு:-

யாழ்ப்பாணம் — தமிழர் கூட்டணி அலுவலகம்.

நல்லூர்—பலாலி வீதி அரசடிச்சந்தி, கந்தர் மடம் ஞானவயிரவர் கோவில் முன்றல்.

உடுவில்—இணுவில்கிழக்கு ஏழாலை மேற்கு அம்மன் கோவில் அருகில்,

காங்கேசன்துறை — மல்லாகம், தமிழர் கூட்டணி அலுவலகம்.

கோப்பாய்— உரும்பராய் நெசவுநிலையம், ஆவரங்கால் சிவன் கோவில் வீதி

வட்டுக்கோட்டை — காரைநகர்.

### முஸ்லிம்கள் ஐவர்...

—1-ம பக்கத் தொடர்

முஸ்லிம்களின் வியாபாரம் படுத்துவிடும் — சிங்களவர்களுக்கு வியாபாரம் பெருகும் என்ற குறுகிய வகுப்புவாத நோக்கமே இந்த பஸ் நிலைய மாற்றத்துக்குக் காரணமாம்.

இதே சமயத்தில் புனித பள்ளிவாசலில் தொழுகையிலிருந்த முஸ்லிம்களைப் பாதிக்கக்கூடிய முறையில் பொலிசார் நடந்துகொண்டதாக சொல்லப்படும் மோசமான செயல் முஸ்லிம்களின் உணர்ச்சியைக் கிளறிவிட்டது முஸ்லிம்கள் மதத்தை தம் உயிராக [illegible] அவர்கள் மன்னிக்கமாட்டார்கள் என்பதும் தெரிந்ததே.

திருக்குறள் மணிகள்
அறத்துப்பால்

15 மில்க்வைற் நீல சோப் அல்லது 2 பார் சோப் அல்லது 2 நீம் வாசனை சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படிபுத்தகம் ஒன்றைப்பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவற்காரத்தொழிலகம்
யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு - 12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ இலக்கத்தில் 1976-ம் வருடம் பெப்ரவரி மாதம் 4-ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org